DEPOSITION OF WITNESS
(CHAPTER XXIII CODE OF CRIMINAL PROCEEDINGS)
IN THE COURT OF THE III ADDITIONAL DISTRICT AND SESSIONS JUDGE,
DHARAPURAM

**SC. No: 56/2021 Deposition of Witness for : P.W.19**

| | | | | | |
|---|---|---|---|---|---|
| Name | : | பாலுசாமி | Caste | : | |
| Father's Name | : | | Calling | : | |
| Age | : | | Taluk | : | |
| Village | : | | District | : | |

Solemnly affirmed according with the provisions of Act XX of 1973 on the 22.10.2025.

**முதல் விசாரணை**

நான் தற்போது திருப்பூர் மாவட்ட காவல் நிலையத்தில் சைபர் செல் பிரிவில் தலைமை காவலராக பணியாற்றி வருகிறேன். கடந்த 24.10.2018 ஆம் தேதி மூலனூர் காவல் நிலைய குற்ற எண். 287/2018 வழக்கில் மொபைல் எண்கள் 9524445032 எண் கொண்ட வோடபோன் மற்றும் 7373785566 எண் கொண்ட ஏர்டெல் நிறுவனங்களின் செல்போன் அழைப்புகள் குறித்து பட்டியல் மற்றும் முகவரி பெறக்கோரி மூலனூர் காவல் நிலைய ஆய்வாளர் கொடுத்த வேண்டுகோளின் அடிப்படையில், என் உயர் அதிகாரியிடம் அனுமதி பெற்று சம்பந்தப்பட்ட நிறுவனத்திற்கு இமெயில் மூலம் 1.9.2018 முதல் 24. 10. 2018 ம் தேதி வரை அழைப்பு பட்டியல் தரக்கோரி தகவல் அனுப்பி, பின்னிட்டு அதே தேதியில் மேற்படி அழைப்பு பட்டியல் மற்றும் முகவரியை சம்பந்தப்பட்ட நிறுவனங்களிலிருந்து பெற்று என்னுடைய மடிக்கணினியில் சாப்ட்வேர் மூலம், மேற்படி எங்களின் டவர் ஐடிக்கு உண்டான முகவரியை பொருத்தம் செய்து, காவல் ஆய்வாளர் வனிதாமணி என்பவருக்கு இமெயில் மற்றும் வாட்ஸ் அப் மூலம் அனுப்பி வைத்தேன். மேலும் இந்த வழக்கில் 65 பி சான்று கேட்டு 7.12 2018– ம் தேதியில் வோடபோன் நிறுவனத்திற்கு என்னுடைய உயர் அதிகாரிகளிடம் கையொப்பம் பெற்று அனுப்பி வைத்தேன். மேலும் ஏர்டெல்

நிறுவனத்தில், மேற்படி தகவல்களை கேட்டு 1.12 2018 ஆம் தேதி 65 பி சான்று கேட்டு உயர் அதிகாரியின் கையெழுத்துடன் தகவல் அனுப்பி வைத்தேன். மேலும், 26.9. 2019 ஆம் தேதி இரண்டு ஆய்வு பட்டியல்களையும் நான் பதிவிறக்கம் செய்து அனைத்து பக்கங்களிலும் கையெழுத்திட்டு ஆய்வாளரிடம் ஒப்படைத்தேன். அன்று ஆய்வாளர் என்னை விசாரித்தார். ஏர்டெல் நிறுவனம் வழங்கிய அழைப்பு பட்டியல் **அ.சா.ஆ.21** (65 பி சான்றுடன்) ஆகும். வோடஃபோன் நிறுவனம் வழங்கிய அழைப்பு பட்டியல் **அ.சா.ஆ.22** (65 பி சான்றுடன்) ஆகும்.

**அரசு தரப்பில் ஆவணங்கள் தாக்கல் செய்ய மனு தாக்கல் செய்ய கோரப்பட்டுள்ளதால் முதல் விசாரணை தொடர்ச்சி ஒத்தி வைக்கப்பட்டது.**

**2ம் எதிரி மேற்கண்ட குறுக்கு விசாரணையை தன்னுடையதாக ஏற்றுக் கொண்டார்.**

இன்று திறந்த நீதிமன்றத்தில் என் முன்பாக சாட்சி விசாரிக்கப்பட்டு தட்டச்சரால் தட்டச்சு செய்யப்பட்டு, சாட்சியால் படித்து பார்க்கப்பட்டு சரி என்றும் என் முன்பு கையெழுத்து செய்தும் ஒப்புக் கொள்ளப்பட்டுள்ளது.

SARAVANAN MANOKARAN

Digitally signed by SARAVANAN MANOKARAN
Date: 2025.10.24 18:57:29 +0530

3–ம் கூடுதல் மாவட்ட மற்றும் அமர்வு நீதிபதி,
தாராபுரம்.